**IN THE COURT OF ADDITIONAL CHIEF JUDICIAL MAGISTRATE, KUMBAKONAM.**

| | | |
|---|---|---|
| **MCOP No. 93/2024** | **நாள் – 04.06.2026** | **சாட்சி –எ.ம.சா.2** |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Act 44 of 1969).

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஆதித்ய விஷ்வா | தந்தை பெயர் | சேதுராஜன் |
| ஊர் | தஞ்சாவூர் | தாலுக்கா | தஞ்சாவூர் |
| தொழில் | நிர்வாக அதிகாரி, நியூ இந்தியா அசூரன்ஸ் கம்பெனி லிட். | வயது | 25/2026 |

**முதல் விசாரணை:**

நான் நியூ இந்தியா அசூரன்ஸ் கம்பெனி லிட் நிறுவனத்தில் நிர்வாக அதிகாரியாக பணிபுரிந்து வருகிறேன். முதல் நிலை சாட்சியத்திற்கான பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள விபரங்கள் என்னால் சொல்லப்பட்டவை. அதிலுள்ள கையொப்பம் என்னுடையது. 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி 2 ஆக சாட்சியம் அளிக்கிறேன்.

1. 13.07.2022 தேதியிட்ட TN 68 V 5135 பதிவு எண் கொண்ட வாகனத்தின் காப்பீடு பாலிசி **எ.ம.சா.ஆ–2.**

2. 29.02.2024 தேதியிட்ட 2ம் எதிர்மனுதாரர் காப்பீடு நிறுவனம் 1ம் எதிர்மனுதாரருக்கு அனுப்பிய அறிவிப்பு **எ.ம.சா.ஆ–3.**

3. மேற்கண்ட அறிவிப்பை 1ம் எதிர்மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை அசல் **எ.ம.சா.ஆ–4.**

4. 2ம் எதிர்மனுதாரரின் வழக்கறிஞர் 1ம் எதிர்மனுதாரருக்கு அனுப்பிய 15.04.2026 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு **எ.ம.சா.ஆ–5.**

5. மேற்கண்ட அறிவிப்பை 1ம் எதிர்மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை அசல் **எ.ம.சா.ஆ–6.**

**1ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்குவிசாரணை**

விபத்து தேதியில் TN 68 V 5135 பதிவு எண் கொண்ட வாகனம் எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டு காப்பீடு பாலிசி நிலுவையில் இருந்தது என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரரின் வாகனம் எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டிருப்பதால் இழப்பீடு வழங்குவதாக இருந்தால் எங்கள் நிறுவனம் வழங்க கடமைப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்கண்ட வாகனத்தின் ஓட்டுனருக்கு ஓட்டுனர் உரிமம் இல்லை என்பதால் எங்கள் நிறுவனம் இழப்பீடு வழங்க கடமைப்பட்டதல்ல.

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்து சம்பந்தமாக எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும் கோப்பின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். விபத்து தேதியில் TN 68 V 5135 பதிவு எண் கொண்ட வாகனம் எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டு காப்பீடு பாலிசி நிலுவையில் இருந்தது என்றால் சரிதான். விபத்து தேதியில் 1ம் எதிர்மனுதாரரின் வாகனம் எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டிருப்பதால் எங்கள் நிறுவனம் மனுதாரருக்கு இழப்பீடு வழங்க கடமைப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

Typed to my dictation in open Court, read over to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

G MANIKANDARAJA

Digitally signed by G MANIKANDARAJA
Date: 2026.06.04 17:52:16 +0530

Additional Chief Judicial Magistrate,
Kumbakonam.